C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 15 NOVEMBER '2023 ஆகாரம் : 11



"கர்த்தருக்குப்
பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும்
ஆசீர்வதிப்பார்"


-சங்கீதம் 115:13

He will bless them that fear the LORD,
both small and great.

-Psalms 115:13

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| 05-SUN<br>4.00 PM<br>10.30PM | HARVEST FESTIVAL 2023<br>ST. DIONYSIUS ORTHODOX CHURCH<br>AL AIN |
| SAT<br>6.30 PM<br>7.30 PM | CHILDREN'S BIBLE SCHOOL<br>ECC. CHURCH CAMPUS<br>MRS. DIVYA SHERIN @ 056 441 1225 |
| SAT<br>7.30 PM | 1st & 3rd WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORKSHIP SERVICE |
| WED<br>7.30PM | BIBLE STUDY & PRAYER<br>PARSONAGE<br>CONTACT : THE PRESBYTER |
| 10-FRI<br>7.30 PM | 2ND FRIDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| 17-FRI<br>7.30 PM | 3rd WEEK OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SAJINA LIVINGSTON @ 055 389 6871 |
| 23-THU<br>7.30PM | 4TH THURSDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. STEPHEN CHELLARAJ @ 056 990 6933 |



# From The Pastor's Desk

அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

இங்கிலாந்தில் உள்ள ஜிப்ராடரில் பிரபுக்களின் குடும்பத்தில் ஏப்ரல் 16 1815இல் பிறந்தவர் தாமஸ் ராக்லேண்ட் ஆவார்.இவர் புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் கல்லூரியில் கணிதப்பட்டம் பெற்று கணித மேதை ஆனவர். ஆண்டவரின் அழைப்பை ஏற்று C.M.S(CHURCH MISSIONARY SOCIETY) வழியாக இந்தியாவின் தமிழகத்திற்கு 1846 இல் சென்னை வந்தார்.பின்னர் வட திருநெல்வேலியை மையப்படுத்தி சிவகாசி மற்றும் அதனை சுற்றியுள்ள சுமார் 750 கிராமங்களுக்கு அதிகாலையிலேயே புறப்பட்டு நடந்து சென்று நற்செய்தியை அறிவித்தவர். ஒருநாள் பசியினால் ஒரு வீட்டில் உணவு கேட்டபோது, பாத்திரத்தில் தந்தால் தீட்டு என்று அவர் அணிந்திருந்த தொப்பியில் கூழ் கொடுத்தனர் அதனை வாங்கி குடித்தப் பின் தொடர்ந்து இறைப்பணியை செய்தவர் தான் இந்த பிரபு ரேக்லாண்ட் ஆவார். ஒருநாள் சாத்தூர் பகுதியில் நற்செய்தி அறிவித்துக் கொண்டிருந்தபோது அவரை எதிர்த்தனர் தலையில் தடியால் அடித்தனர், ரத்தம் வடிகின்ற போது மக்கள் கற்களால் அடித்தனர் அதில் நடக்கத் தெரியாத சிறு பையன் ஒருவன் கல்லால் அடித்ததும் கொடுமையே. பல இன்னல்கள், பல பாடுகள்... இவற்றின் ஊடாக அநேகர் இரட்சிக்கப்பட்டுள்ளனர், ஆலயங்கள் எழும்பியுள்ளன, இவற்றுக்கெல்லாம் உச்சமாக உருவான சாட்சியாபுரம் கிராமம் ஒரு மகுடம் ஆகும். ராக்லேண்ட் அவர்கள் காச நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டு 22. 10. 1858 அன்று இறைவரின் அழைப்பை ஏற்றார். கோதுமை மணியாக நிலத்தில் விதைக்கப்பட்டார். நாம் கிறிஸ்துவுக்காக எதைக் கொடுக்கிறோம்?எதை இழக்கிறோம்?

ஆபிரகாமே என்று அழைத்த ஆண்டவர் உன் மகன் ஈசாக்கை தகன பலியிடு என்றார் ஆண்டவர்.(ஆதியாகமம் 22: 1,2) ஆபிரகாம் உடனே ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்படிந்தார்.

தன் மகன் ஈசாக்கை பலியிட அனைத்து ஏற்பாடுகளையும் செய்து மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டார். தொடர்ந்து தகன பலிக்கான கட்டைகளை ஈசாக்கின் மீது வைத்து ஆபிரகாம் தன் கையிலே நெருப்பையும், கத்தியையும் எடுத்துக் கொண்டு இருவரும் போனார்கள் (ஆதியாகமம் 22:6)

பிறகு ஆபிரகாம் பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடக்கி, தன் மகன் ஈசாக்கை கட்டி பலி படத்தின் மேல் கிடத்தினார். வெட்டுவதற்கு கத்தியையும் எடுத்தார்.(ஆதியாகமம் 22:9,10)

அப்பொழுது தூதனின் குரல், அது ஆபிரகாமே ஆபிரகாமே என்று கூப்பிட்டார் .உடனே ஆபிரகாம் இதோ அடியேன் என்றார். பிள்ளையாண்டான் மேல் உன் கையைப்போடாதே நீ கர்த்தருக்கு பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார். (ஆதியாகமம் 22: 12) பின்னர் முள்ளில் சிக்குண்ட ஆட்டுக்கடாவை ஈசாக்கிற்கு பதிலாக தகன பலியாக்கினார்.

அதினாலே கர்த்தருடைய பருவத்தில் பார்த்துக் கொள்ளப்படும் என்று யெகோவா ஈரே என்று அந்த இடத்திற்கு ஆபிரகாம் பெயரிட்டார் (ஆதியாகமம் 22:14) இதனால் ஆபிரகாம் நிறைவான ஆசிகளை பெற்றார்.(ஆதியாகமம் 22: 17)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ராக்லேண்ட் மிஷினரியைப் போல நம்மையே கிறிஸ்துவுக்காக கொடுக்க வேண்டும். அதாவது நம் நேரம், தாலந்துகள், திறமைகள்,பொருட்கள் என்று எவற்றையெல்லாம் மனமுவந்து தருகிறோம், சிந்திக்கலாம்.

ஆபிரகாம் தனது மகன் ஈசாக்கை கடவுள் கேட்டபோது,அந்த வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படிந்தார்.அதன் நிறைவு பெருக்கமான ஆசீர்வாதம்.உற்சாகமாக கொடுக்கிறவனிடத்தில் ஆண்டவர் பிரியமாயி ருக்கிறார்.(2 கொரிந்தியர் 9:7)

அன்று ஆபிரகாமை அழைத்து மகன் ஈசாக்கை பலியிடச் சொன்ன ஆண்டவர், இன்று ஆண்டவர் நம்மை அழைக்கிறார்,உன் உள்ளத்தை உண்மையாய் தருவாயா? உனக்கு உள்ளதை உற்சாகமாய் தருவாயா?சிந்திப்போம், செயல் வீரர்களாவோம், ஆண்டவர் ஆசீர்வதிப்பார், ஆமென்.

இறைப் பணியில், ஆயர்

*Rev. S. Baktha Thiyagarajan*

# HANNAH'S PRAYER



**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.**

**அன்னாள் என்றதுமே நம் நினைவிற்கு வருவது ஆண்டவரிடம் மன்றாடி குழந்தை பெற்றெடுத்தார் என்பதே.அன்னாள் என்ற பெயருக்கு கடவுளின் கிருபை என்று பொருள் அவரது பெயருக்கு ஏற்றபடி கடவுளின் கண்களில் அன்னாளுக்கு கிருபை கிடைத்தது.**

## நிந்தையுடன் வாழ்ந்தவர் (1 சாமுவேல் 1:2-8)

**அன்னாள் தன் கணவர் எல்க்கானாவுடன் ஆண்டுதோறும் எருசலேம் ஆலயம் செல்வது வழக்கம். அன்னலின் சக்களத்தி பெனின்னாளுக்கு குழந்தைகள் இருந்ததால் அன்னாளை மிகவும் மன வேதனைப்படும்படி பேசினாள்.**

**ஆண்டவர் அன்னாளின் கர்ப்பத்தை அடைத்திருந்தார். ஆனால் அன்னாள் கடவுள் மீது வைத்திருந்த பக்தியை அடைக்க வில்லை. அநேக நிந்தனைகள், அவமானங்கள் ஆனால் ஆண்டவரை தேடுவதில் அன்னாளுக்கு குறைவில்லை எல்க்கானா பிள்ளைகள் மீதுதான் அதிக பாசம் வைத்திருக்க வேண்டும்,ஆனால் அன்னாளின் கணவர் பத்து பிள்ளைகளை காட்டிலும் நான் உனக்கு அதிகம் அல்லவா என்று கூறுவதைப் பார்க்கின்ற போது ,அன்னாள் அன்பான மனைவி என்பதை காட்டுகின்றார். ஆனாலும் அன்னாளோ அதில் திருப்தி அடையவில்லை, நிந்தையுடன் வாழக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்; ஆண்டவரின் திருப்பாதங்களை தேடி, ஓடினார்.**

## கண்ணீருடன் ஜெபித்தவர் (1 சாமுவேல் 1:10-17)

அன்னாள் போய் மனங்கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள்.(1சாமுவேல் 1:10) ஆண்டவரே எனக்கு ஒரு ஆண் பிள்ளையை கொடுப்பீரானால் அவனை உமக்கே ஒப்புக்கொடுப்பேன் என்று சத்தம் இன்றி, கண்ணீருடன் ஜெபிக்கின்ற ஜெபத்தை கர்த்தர் அறிந்தார்.அவர் இருதயத்தை அறிகின்ற ஆண்டவர் அல்லவா? கடவுள் தம்மை நம்புகின்றவர்களை கைவிட மாட்டார்,கடவுள் ஜெபத்தை கேட்கிறவர் என்பதற்கு அன்னாளின் ஜெபம் ஒரு எடுத்துக்காட்டு. அன்னாள் ஏலியிடம் நான் மனக்கிலேசம் உள்ள ஸ்திரி,நான் மது குடிக்கவில்லை, நான் கர்த்தருடைய சன்னதியில் என் இதயத்தை ஊற்றி விட்டேன்.நான் பேலியாளின் மகள் அல்ல, மிகுதியான வசனத்தினாலும், வேதனையினாலும் இம்மட்டும் விண்ணப்பம் பண்ணினேன் என்றார். அதற்கு ஏலி சமாதானத்துடன் போ, இஸ்ரவேலின் தேவன் நீ செய்த விண்ணப்பத்தின் படி உனக்கு கட்டளையி டுவார் என்றார்.இவ்வார்த்தையை அன்னாள் அப்படியே விசுவாசித்தார் அதன் பின்பு அன்னாள் துக்க முகமாய் இருக்கவில்லை.

## மகிழ்ச்சியுடன் கொடுத்தவர் (1 சாமுவேல் 1:20-28)

கர்த்தர் அன்னாளை நினைத்தார், அன்னாள் ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்தார். கர்த்தரிடத்தில் கேட்டேன், பெற்றுக் கொண்டேன் என்று சொல்லி அவனுக்கு சாமுவேல் என்று பெயரிட்டார்.அவரது விண்ணப்பத்தின்படி ஆலயத்தில் பால் மறந்த குழந்தையை மனதார கொடுத்தார்,அன்னாளின் காணிக்கை பெரிது.

கொடுப்பதில் அன்னாளுக்கு மகிழ்வும், மனநிறைவும் இருந்தது. கர்த்தரின் அற்புதச் செயலை அன்னாள் அனுபவத்துடன் பாடுகிறார். "என் இருதயம் கர்த்தருக்குள் களி கூறுகிறது, உம்முடைய இரட்சிப்பினால் சந்தோஷப்படுகிறேன்"(1 சாமுவேல் 2:1) தொடர்ந்து, "அவர் சிறியவனைப் புழுதிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலி ருந்து உயர்த்துகிறார்"(1 சாமுவேல் 2:8) என்றும் பாடுகிறார்.

எனவே பிரியமானவர்களே, அன்னாளின் பெயருக்கே ற்றபடி கடவுளின் கிருபை பெற்றார்,புதுமையானவராக கர்த்தரே அவரை மாற்றினார்.அன்னாளின் நிந்தையை கர்த்தர் கண்டார்,கண்ணீரின் ஜெபத்தை கேட்டார், நிறைவில் அன்னாள் மகிழ்வுடன் கொடுத்தார்.

நிறைவாக அன்பானவர்களே, அன்னாளைப் போன்று ஆண்டவரின் திருப்பாதங்களைப் பற்றி பிடிப்போம்,கண்ணீருடன் வேண்டுதல் செய்வோம், கர்த்தருக்கென்று மகிழ்வுடன் திருப்பணி செய்வோம், இயன்ற மட்டும் மன நிறைவுடன் கொடுப்போம்.

# "உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்"

**-2 கொரிந்தியர் 9:7**

ஆண்டவர் இயேசு கிறிஸ்துதாமே ஆசீர்வதிப்பாராக

## ஆமென்

இறைப் பணியில், ஆயரம்மா

*Mrs. P. Velanganni*



# செயலர் மடல்

நம்முடைய பிதாவாகிய கர்த்தராலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினாலும் நம் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக. கடந்த பத்து மாதங்களாக நம்மை பாதுகாத்து வழிநடத்தி வந்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இப்போதும் புதிய மாதத்தை கண்டிருக்கிற கண்டிருக்கிறேன் நம் அனைவரையும் எல்லா நிலைகளிலும் நிலைகளிலும் ஆண்டவர் வழிநடத்திக் காப்பாராக.

சென்ற மாதங்களில் அறுவடை பண்டிகையின் பணிகளுக்காக திருச்சபையின் குழுக்களாக சபையாரின் இல்லங்களை சந்தித்து ஜெபித்தோம். எங்களை முழு மனதுடன் ஏற்று ஆதரித்தீர்கள். தொடர்ந்து மற்ற அமீரகத்தில் உள்ள திருச்சபைகளை சந்திக்கவும், அவர்களை நம்முடைய திருச்சபையின் அறுவடை பண்டிகைக்கு அழைக்கவும், அவர்களின் அறுவடை பண்டிகையிலே கலந்து கொள்ளவும், இத்திருப்பணிகளில் ஒத்துழைப்பை கொடுத்த அன்பர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பாக CSI.ஷார்ஜா(K.K.DIOCESE) திருச்சபையின் அறுவடை பண்டிகையில் JUICE STALL அமைத்து திருப்பணி செய்த அனைவருக்கும் மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து திருச்சபை மக்கள் அனைவரும் நமது திருச்சபை அறுவடை பண்டிகைக்காக ஊக்கமாக ஜெபிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற மாதத்தில் மாதத்தில் வாலிபர் ஐக்கிய சங்கத்தின் மூலம் மூலம் மூலம் அக்டோபர் 14 ஆம் தேதி மாலை ஆராதனையை மிகவும் சிறப்பாக நடத்தினார்கள், அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ந்து நமக்கு இந்த தேசத்தில் ஆண்டவரால் கிடைக்கப்பெற்ற CSI, AL AIN திருச்சபையின் வளர்ச்சிக்காக ஜெபிப்போம். சங்கீதம் 122:1-ல் கர்த்தருடைய ஆலயத்துக்கு போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாய் இருந்தேன் , என்பது போல நாம் அனைவரும் நமது ஆலயத்தில் நடைபெறுகிற அனைத்து ஊழியங்களிலும், ஆராதனையிலும் ஜெபத்தோடு பங்கு பெறுவோம்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தாமே நம் ஒவ்வொருவரையும் பேர் பேராக குடும்பம் குடும்பமாக ஆசீர்வதிப்பாராக

# ஆமென்

இறைப்பணியில்

## MR. C. HAVIN HEBA

திருச்சபைச் செயலர்




### நீ உன் ஜாதிக்காய் கூவும் நியாயம் என்ன..?

கிறிஸ்தவனே..! அனுதினமும் உன் தட்டில் பரிமாறும் உணவினை எந்த ஜாதி விவசாயி பயிரிட்டான் என நீ கேட்பதில்லையே ஏன்..? விபத்தில் உன்க்கு உதவிகரம் நீட்ட வந்தவனிடமோ, அல்லது மருத்துவமனையில் நீ மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும் போது உன் உயிர்காக்க போராடும் டாக்டரிடமோ, அவரின் ஜாதியை கேட்பாயோ..? அரசு அலுவலகம் நி சென்றப்போது உன் தேவையை பூர்த்தி செய்யும் யாரிடமும் நீ ஜாதியை கேட்பதில்லையே ஏன்..? ஏன்யென்றால் இவையெல்லாம், உனக்கான சுயநல தேவை..!! எப்போதுமே உன் தேவைகளை பூர்த்தி செய்ய "ஜாதி" உனக்கு ஒரு பொருட்டாய் தெரிவதில்லை; இதை எப்போதாகிலும் உணர்ந்ததுண்டோ..? உனக்குள் இந்த ஜாதிப் பெருமையை ஊட்டி வளர்த்தது யார்..? கிறிஸ்தவனே நீ ஜாதி பெருமை கொண்டு ஜாதி கொடுமை செய்கிறாய்..

இந்த உலகில் கிறிஸ்தவ மதத்தில்தான் சுமார் 33 ஆயிரத்து 830 கிறிஸ்தவ ஜாதி பிரிவுகள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. பல மிஷனரிகள் கோதுமை மணியாய் தம் இன்னுயிர் ஈந்து வளர்த்தெடுத்த திருச்சபைக்குள் இன்று தீயாய்பரவுகிறது இந்த கொடிய ஜாதியென்னும் நோய்; இதை வளர்ப்பது யவரோ அல்ல, கிறிஸ்தவர்களாலேயே கிறிஸ்தவத்திற்குள் வளர்க்கப்படுகிறது என்பதுதான் வேதனையின் உச்சம்.

நமக்குள் வளர்ந்து பெருகவேண்டிய ஆவியின் நல்ல கனிகள் (கலா6:22,23) இன்று வளர்க்கப்படாமல், அழிக்கப்பட வேண்டிய ஜாதி என்னும் பிசாசு வளர்ந்து மேலோங்கி நிற்கிறது. எந்த ஒரு மனிதன் தன் ஜாதியை நினைத்து பெருமை கொள்கிறானோ, அவன் கிறிஸ்துவிற்குள் சரியாக போதிக்கப்பட்டு வளர்க்கப் படவில்லை என்றே அர்த்தம்.. பாவத்தைக் கண்டு கோபம் கொள்ளாமல், ஜாதியை கண்டு கோபம் கொள்பவன் எப்படி கிறிஸ்துவின் அடையாளமாயிருக்க முடியும்.?

கர்த்தர் எல்லா ஜாதிகள் மேலும் உயர்ந்தவர் என வேதம் கூறுகிறது. (சங் 113:4) வேதத்தில் 'ஜாதி' என்ற வார்த்தையை, ஒருவன் இன்ன தேசத்தை சேர்ந்தவன் என்பதை குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது, இதை நாம் ஒருபோதும் தவறாக புரிதலாகாது. ஆங்கில மொழிபெயர்பில் (The Lord is high above all Nations – Psa 113:4) என மிகத்தெளிவாக குறிப்பிட பட்டுள்ளது. இயேசு தன்னிடம் சுகத்திற்காய், ஆறுதலுக்காய் ஏங்கி நின்றவரிடம் ஒருபோதும் ஜாதியை கேட்டதில்லை.. ஆனால் இன்று பட்டாம்பூச்சி போல் சிறகுகளை விரித்து பறந்து விளையாடும் சின்னம் சிறார்களிடமே "என் ஜாதி" என்னும் வெறி விதைக்கப்படுகிறது..!! ஜாதியை உயர்த்திப்பிடிக்கும் கிறிஸ்தவனே..!! கர்த்தர் அதே ஜாதியை கொண்டே உனக்கு பாடம் புகட்டுவார் என்பதை நினைவில் கொள். வேத வசனத்தின்படி, தன் சகோதரனைப் பார்த்து 'மூடனே' என்று சொல்லுகிறவனுக்கு எரிநரகம் கிடைக்குமானால், தன் சகோதரனை 'கீழ் ஜாதி' என்று அவமதிப்பவனுக்கு எப்படி பரலோகம் கிடைக்கும்..?

ஜாதியை போற்றும் கிறிஸ்தவனே.. இரண்டாம் வருகையில் நாம் கிறிஸ்துவிற்கு மணவாட்டி, ஆனால் உன் "ஜாதி பெயர்" அவர் பட்டியலில் இடம்பெறாது. ஏன்யென்றால்; கிறிஸ்து, ஜாதியின் அடிப்படையில் தன் மணவாட்டியை சேர்த்துக்கொள்ளமாட்டார் என வேதம் திட்டமாய் கற்றுதருகிறது. **மெய் மணவாளன் வரும் போதும், ஜாதி பார்த்துதான் அவரையும் மணவாளனாக ஏற்றுகொள்வாயோ ???** எச்சரிக்கை பிரியமானவர்களே! **நாம்அல்ல, அவர் நம்மை ஏற்று கொள்ளமாட்டார்.**


கிறிஸ்தவனே..! திருச்சபையின் ஐக்கியத்திற்குள் ஜாதியென்னும் பிசாசை நுழைய விட்டுவிடாதே. அது கொடிய விஷம், அது திருச்சபையின் ஐக்கியத்தையே சிதைத்துவிடும். கிறிஸ்துவுக்குள் ஜாதி இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். இல்லை, இல்லை... ஜாதியே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாய் இருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின என்று சொல்லியிருக்க, வேற்று தெய்வத்தின் சிருஷ்டியாய் நாம் தொடர்வது நியாயமோ???

**ஒரே இரத்தத்தினின்று நம்மை உண்டாக்கினார் என்றும், ஒரே இரத்தத்தினாலே நம்மை மீட்டுக்கொண்டார் என்றும் சொன்ன அவரின் வேத வார்த்தையை உண்மையாக்குவோம். ஜாதியில்லா கிறிஸ்தவம் உருவாக்குவோம்...!!!**

ARTICLE BY

**MR. ASHOK KUMAR**

MEN'S FELLOWSHIP



# வீணான வார்த்தைகள் வேண்டாம்

**"மனுஷர் பேசும்**

**வீணான வார்த்தைகள்**

**யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே**

**கணக்கு ஒப்புவிக்க வேண்டும்**

**என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்"**

**- மத்தேயு 12:36**

காலை எழுந்ததிலிருந்தே அநேகருடைய வாய் பூட்டப்படாமலே திறந்திருக்கும். வழ வழவென்று பேசிக்கொண்டு தங்கள் நேரத்தோடு, பிறர் நேரத்தையும் வீணாக்கும் மக்களுக்கு குறைவில்லை.

ஒன்றுமில்லாத காரியங்களை மிகைப்படுத்தி தங்களை ஞானிகள் என்று பாராட்டிக்கொள்ளும் மக்களுமுண்டு.

“சொற்களின் மிகுதியால் பாவமில்லாமல் போகாது” (நீதிமொழிகள்10:19) என்று வேதம் மிகவும் தெளிவாக்க் கூறுகிறது. பேசி விட்ட வார்த்தைகள் உடைந்து போன ஒரு முட்டைக்கு சமானம் என்று ஒரு பக்தன் கூறியுள்ளார்.

கிரேக்க ஞானியான சாக்ரடீசிடம் பேச வேண்டும் என்று விரும்பினாலும் நேரம் கிடைப்பதில்லை. ஏனெனில் பொன்னான நேரத்தையும், வீணான வார்த்தைகளையும்

குறித்து அவர் எச்சரிக்கையாக இருந்தார். ஒருநாள் அவர் நண்பர் சாக்ரடீசிடம் பேசிக்கொண்டிருந்தார். எதிர்பாராத விதமாக மூன்றாம் நபர் ஒருவரின் பேச்சு வந்தது. உடனே அவர் இடைமறித்து நண்பனே!
நீ கூறப்போகும் காரியம் உண்மை என்று அறிவாயா?
அவை நன்மையான காரியங்களா?
அவற்றால் எனக்கு ஏதேனும் பயனுண்டா? என்று யோசித்துப்பாருங்கள். சரியென்றால் என்னோடு தொடர்ந்து பேசலாம் என்றார். சாக்ரடீஸ் கூறிய இந்த வார்த்தைகள் அந்நண்பனை வெகுவாக சிந்திக்க வைத்தது. நண்பனாக இருந்தாலும் தலை குனிந்து சென்றார்.

இன்று நாமும் வார்த்தையால் பிறரை இம்சித்து புண்படுத்துவதை நிறுத்த வேண்டும். பரஸ்திரீகளின் வாய் ஆழமான படுகுழி என்று வேதம் சொல்லுகிறது.

எனவே நாம் மற்றவர்களுக்கு நன்மையான, பிரயோஜனமாள வார்த்தைகளைப் பேசுவோம். பேசுவதற்கு முன் இரு முறை யோசிப்போம்.

எம்மாவு சீஷர்களிடம் இயேசு கிறிஸ்து பேசும் போது நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்து விட்டு எரியவில்லையா? என்று பேசிக்கொண்டதை நாம் பார்க்கிறோம்.(லூக்கா24:32)

**நம்முடைய வார்த்தைகளும் மற்றவரின் இதயத்தை மகிழ்விப்பதாக இருக்க வேண்டும்.**

அவ்வாறு செய்ய நம்மனைவருக்கும் கர்த்தர் கிருபை செய்வாராக

# ஆமென்

ARTICLE BY

Mrs. P. Velanganni

WOMEN'S FELLOWSHIP



# உத்தம குமாரன்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் ஸ்தோத்திரம்.

அப்போஸ்தலனாகிய பவுல் பொதுவான நிருபங்களினால் திருச்சபைகளுக்கு தான் தெரிந்து கொண்ட உடன் ஊழியக்காரரினாலும் , சீஷர்களினாளும் எச்சரித்து புத்தி சொல்லி போதித்து நடத்தி விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் மாதிரியை காண்பித்தார்.

பவுலினால் தெரிந்து கொள்ளப்பட்ட வாலிபன் விசுவாசத்தில் உத்தமகுமாரன் , கடவுளை கனப்படுத்தல் (HONORING GOD) மற்றும் கடவுளை தொழுது கொள்ளுதல்(WORSHIPPING GOD) என்று அர்த்தம் கொள்ளும் தீமோத்தேயுவை குறித்துதான் பவுல் சபைகளுக்கு கிறிஸ்தவர் வாழ வேண்டிய வாழ்க்கை முறைமைகள வழிகாட்டுகின்றார்.

நாம் வாலிபப் பருவத்தை குறித்து பவுல் தீமோத்தேயு மூலம் கூறும் வசனத்தினை பார்க்கலாம்.

வாலிபப் பிள்ளைகளாக குறிப்பாக பெண்கள் (1தீமோ 2:10) விலை உயர்ந்த வஸ்திரத்தினாலும், புற அலங்காரமாகிய நகையினால் அல்ல; தகுந்த வஸ்திரம் தெளிந்த புத்தி தேவ பக்தியிலும் நல்ல கிரியைகளினாலும் தேவனை வெளிப்படுத்துகிற பிள்ளைகளாய் வாழ நாம் அர்ப்பணித்துக் கொள்வோம்.

பின்னும் பவுல் வாலிபர்களுக்கு தீமோத்தேயுவின் இரண்டாம் நிருபத்திலும் விசுவாச ஜனங்களாய் நமக்கு (2 தீமோ 2:22) சொல்லிய வசனத்தின் படி பாலிய இச்சைகளுக்கு விலகியோடி சுத்த இருதயத்தோடு கர்த்தரை தொழுது கொள்கிறவர்களுடன் நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடுவோம்.

அதுமாத்திரமல்ல (1தீமோ 4:12) நம்முடைய இளமையை குறித்து ஒருவரும் அசட்டை பண்ணாதவர்களாய் நாம் வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவிலும் விசுவாசத்தில் தேறினவர்களாய் கற்பிலும் மற்றவர்களுக்கு மாதிரியாய் இருந்து ஆண்டவரை மகிமைப்படுத்துகிற பிள்ளைகளாய் வாழ அர்ப்பணித்துக் கொள்வோம்.

இவ்வுலகில் நம்மை பாவத்திற்கு இழுக்கும் படியான அநேக உலக காரியங்கள் நம் முன்னே இருக்கின்றன. இன்றைய வாலிப பிள்ளைகளின் அங்கலாய்ப்பு என்றால் இந்த ரகசிய பாவங்கள், துணிகரமான செயல்கள் கடவுளை விட்டுப் பிரிக்கின்ற காரியங்கள். உலகத்திலும் நாம் பயன்படுத்துகிற மொபைலிலும் சிக்க வைக்கிறான் பிசாசு.

தனக்கு கொஞ்ச காலம் மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என அறிந்து கெர்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாம் என அலைந்து திரிகிறான் பிசாசு (1பேது 5:8).எனவே இவை எல்லாவற்றிலும் இருந்து இரட்சிக்கவும் நம்மை பாதுகாத்து பரிசுத்தப்படுத்தவும் இயேசு கிறிஸ்துவை நோக்கி நாம் கிட்டி சேர்வோம். பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமானது (1தீமோ 1:15) எனவே நாம் நம்முடைய எல்லா வாலிபத்தின் மீறுதல்களையும் பாவங்களையும் விட்டு நீங்கி இயேசுவைப் பற்றிக் கொள்வோம்.

கடைசியாக வாலிப சகோதர சகோதரிகளே, நாம் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்சேவகர்களாய் தீங்கு அனுபவித்து (2 தீமோ 2:3) இயேசு கிறிஸ்து வெளிப்படும் நாளில் நாம் கறைத்திரை அற்றவர்களாக விசுவாசத்திலும் உண்மையிலும் நிலைத்திருப்போம்.

வாலிபர்களாகிய நாம் கிறிஸ்து இயேசுவுக்காக நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தை காத்துக் கொண்டேன் இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது.நீதி உள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்கு தந்தருள்வார் (2 தீமோ 4:7-8) என்ற நிச்சயத்தோடு தொடர்ந்து அழைத்த அழைப்பில் உறுதியாக தொடர்ந்து பவுல், தீமோத்தேயுவைப் போல் வாலிபப்ராயத்தில் இயேசுவுக்காக ஓடுவோம் கர்த்தர் நம்மை உலகத்தின் முடிவு பரிந்தும் காத்து நடத்த போதுமானவராய் இருக்கிறார்.

"தேவனுக்கு

பெரிய காரியங்களை செய்வோம்,

தேவனீடத்திலிருந்து

பெரிய காரியங்களை எதிர்பார்ப்போம்"

-வில்லியம் கேரி

ARTICLE BY

**Miss. R. Nancy Esther Rajathi**


youth FELLOWSHIP

# PRIMARY - B

Chris Gabriel





Jehoash John







Janet Thirza

# PRIMARY - B




Eesha




Haryter Samuel




Reagan Shan

TEACHER

MRS. ROSELIN TAMILSELVI

# OCTOBER WINNERS

## Find The Way

- Jessica
- Sherinsha
- Joshua Jose
- Janet Thirsha

## Word Search

- Jessica
- Joshua Jose
- Janet Thirsha

## Kids Colouring

- Jessica
- Aashika
- Liana Ann
- Johana Jose
- Janet Zaharina

## Cross Word

- Sherinsha
- Janet Zaharina
- Jemima

Congratulations

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject : Your name / Quiz, type / Month - Year**

**To Church Email : csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# NUMBERS: 25-36

# எண்ணாகமம்: 25–36

OCTOBER '22 - QUESTIONS

1. பக்தி வைராக்கியம் காண்பித்தவர் யார்?
2. ஆரோனின் தாய் பிறந்த இடம் எது?
3. கர்த்தரின் ஆவியை பெற்றிருந்த மனுஷன் யார்?
4. சுகந்த வாசனையான தகன பலி எத்தனை நாள் செலுத்த வேண்டும்?
5. ஆத்துமாக்களை தாழ்மை படுத்த வேண்டிய நாள் எது?
6. எவர் தடை செய்கிற பொருத்தனை மன்னிக்கப்படும்?
7. அக்கினியால் சுத்தப்படுத்த வேண்டியவைகள் எவை?
8. 'உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்'எங்கே உள்ளது?
9. ஆரோன் மரணம் அடைந்தபோது வயது எத்தனை?
10. கானான் தேசம் எத்தனை கோத்திரங்களுக்கு பங்கிடப்பட்டது?
11. தேசத்தை தீட்டுப்படுத்துவது எது?
12. வேறொரு கோத்திரத்துக்கு சேரக்கூடாதது எது?

## அக்டோபர் - 2023-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. எண் 13:23 | 2. எண் 14:24 | 3. எண் 15:36 | 4. எண் 16:32 | 5. எண் 17:8
6. எண் 18:16 | 7. எண் 19:18 | 8. எண் 20:27,28 | 9. எண் 21:9 | 10. எண் 22:28
11. எண் 23:23 | 12. எண் 24:17

திருமதி.பிப்ளின் நெல்சன் திருமதி.ராதிகா செல்வகுமார் திருமதி.ரேனா ஜோஸ் செல்வகுமார்
திருமதி.ஜெயின் அற்புதக்கனி திருமதி.பானு அருண்குமார் செல்வி.அஜின்ஷா


ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.
மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

YOUR NAME / BIBLE QUIZ / APR'22 | SENT TO: CSITCALAIN@GMAIL.COM

056 766 8348

Name :

KIDS COLORING




# Find The Way

**Name :**

## Lord's Prayer Maze


Find your way through the maze by connecting each phrase of the Lord's Prayer. Then color the picture of Jesus at the end of the maze.



Name :

# WORD SEARCH

## Lord's Prayer Word Search




- temptation
- trespasses
- hallowed
- forever
- deliver
- forgive
- kingdom
- heaven
- Father
- glory
- power
- thine
- bread
- daily
- earth
- amen
- evil
- lead
- name

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | C | F | J | F | O | H | F | A | T | H | E | R | U | C | D | H |
| S | Q | L | D | O | Z | D | A | I | L | Y | U | K | V | P | S | T |
| D | B | O | L | R | O | T | P | B | S | B | B | Q | F | Q | Y | D |
| O | W | I | H | G | J | I | H | C | W | D | U | L | O | R | C | A |
| L | V | E | X | I | A | V | M | Q | N | H | Q | N | R | E | R | E |
| E | Z | C | N | V | H | T | N | N | G | W | C | P | E | V | N | L |
| T | S | M | T | E | M | P | T | A | T | I | O | N | V | I | C | N |
| H | R | D | R | B | M | Z | D | M | R | P | G | C | E | L | G | R |
| I | Q | E | G | A | G | A | C | E | Q | X | Y | O | R | E | Y | P |
| N | M | W | X | X | E | D | Y | A | X | O | Z | H | J | D | O | X |
| E | X | O | Q | R | E | I | R | L | Y | V | E | V | L | W | H | E |
| G | C | L | B | H | A | D | O | O | Z | A | Q | X | E | N | D | O |
| B | C | L | J | K | R | I | L | C | V | Q | O | R | E | I | K | G |
| G | P | A | M | G | T | S | G | E | F | O | I | A | D | D | G | B |
| N | W | H | G | Z | H | A | N | Q | U | E | T | T | F | B | R | V |
| E | I | S | L | M | S | E | S | S | A | P | S | E | R | T | H | W |
| Y | Y | X | O | D | T | O | U | M | O | D | G | N | I | K | I | T |

CROSS WORDS

**Name :**

# THE LORD'S PRAYER



**Across**

1. For Thine is the kingdom, and the glory and the ______________ forever. Amen

6. Thy ____________ be done.

7. As we forgive our ____________

9. Thy ______________ come.

10. And forgive us our ________

11. Give us this ________

12. Our Father which art in _____________

**Down**

2. _______________ be thy name.

3. Our daily ___________

4. On ___________ as it is in Heaven.

5. ______________ us from evil

8. Lead us not into ______________

# November'23

| | |
|---|---|
| 01-NOV | Mr. M. C. Christopher |
| 01-NOV | Ms. Jeremy Evans Prince S/o Prince Pitchiah |
| 06-NOV | Mr. R. Paul Gnana Prabu |
| 06-NOV | Mrs. A. Jennifer |
| 06-NOV | Mrs. Glymond Fenzer |
| 08-NOV | Master. Joash Cyrus S/o Mr.Ashok Daniel Prabakaran |
| 09-NOV | Mrs. Sunitha Ravindra |
| 12-NOV | Ms. Ida Priskilla D/o Rev. Baktha Thiyagarajan |
| 12-NOV | Ms. Jenisha Christina D/o Mr. Christoper |
| 14-NOV | Mrs. Jein Arputhakani Rajavel |
| 15-NOV | Master. Jahosh John Joseph S/o Mr. John Joseph |
| 17-NOV | Mrs. Harika Chandrasekar |
| 17-NOV | Master. Raja Sekar S/o Selva Nayagam |
| 18-NOV | Ms. Prince Abraham Daniel S/o Mr. Rajan Prabakaran |
| 19-NOV | Mr. Prince Emmanuvel |

*Happy Birthday, God Bless You All*

| | |
|---|---|
| 19-NOV | Mr. G. Stanly |
| 19-NOV | Ms. Jaya Prithi D/o Mr. Selva Nayagam |
| 20-NOV | Mrs. Ajeetha J |
| 21-NOV | Mr. Lawrence Gambeeram |
| 23-NOV | Mrs. Ceciliya Rajkumar |
| 23-NOV | Master. Joel Shino Mathew S/o Mr. Shino P Mathew |
| 23-NOV | Mrs. J. Vivilin Juni |
| 23-NOV | Mrs. Hephzibah |
| 25-NOV | Mrs. Grace Packia Sugirtha |
| 25-NOV | Ms. Abiya D/o Mr. Sankaran Chinniyan |
| 26-NOV | Ms. Evalina D/o Mr. Jayan Dharmaraj |
| 27-NOV | Mrs. Suja Jasmine Mesiah Das |
| 27-NOV | Mrs. Aishwariya |
| 27-NOV | Mrs. Annie Selvi Danesh |
| 28-NOV | Mrs. Josephine Nimshi |
| 29-NOV | Mr. S. Deva Prakash |
| 30-NOV | Ms. J. S. Inial Immanuel D/o Mr. Stephen Chellaraj |

*Happy Birthday, God Bless You All*

# Happy Anniversary

08-Nov

Mr. A. Prem Jennifer
&
Mrs. Baby Christy Monalizha

23-Nov

Mr. G. Stanly
&
Mrs. R. Gold Jency

30-Nov

Mr. Babu Abraham
&
Mrs. Babitha Babu

# HARVEST Festival




























HARVEST
Festival

































HARVEST Festival

# Stalls, Auctions & Competitions































HARVEST
Festival












00:00:33






"அவனவன்
விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல,
தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்;
உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார்"

-2 கொரிந்தியர் 9:07

Every man according as he purposeth in his heart, so let him give; not grudgingly, or of necessity: for God loveth a cheerful giver.

-2 Corinthians 9:07


EDITOR

THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348

Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org


STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY